# பிறப்பொக்கும்..!

கோலம் நிறைந்து, கொள்கைகள் சிறந்து,
குவலயம் போற்ற வாழ்வு தொடர்ந்திட,
ஆலம் விழுதின் அழகிய ஊஞ்சல்,
அடுத்ததாய் மனத்தில் அரங்கம் ஏறும்!
சீலம் எனவாய் சிந்தையில் இருத்தி,
சிரித்து மகிழ்ந்து வாழ்வைத் தொடர,
காலம் நமக்கோர் கவிதை சொல்ல,
கனவு என்றே மனமும் கொள்ளும்!

வாழும் நிலையின் வகையை அறிந்தால்,
வருவதும் போவதும் அறிவைச் செதுக்கும்!
வீழும் துன்பங்கள் இல்லை என்றாகிட,
விருப்பக் களங்கள் மனத்தைச் சிதைக்காது!
மேழியின் செல்வமே வயிற்றை நிறைக்கும்!
மென்பொருள் வந்தா பசியைத் தீர்க்கும்!
ஆழியாம் கடலும் அடுத்து வனங்களும்,
அழகாய் வாழ்வை நிலைக்கச் செய்யும்!

ஒவ்வொரு நிலையும் வாழ்வில் உண்டு!
ஒவ்வொரு உயிர்க்கும் நிலைக்கலன் உண்டு!
ஒவ்வா தொழிக்க எதுவும் இல்லை!
உயிர்களின் பிணைப்பே பூமியை நிகழ்த்தும்!
வெவ்வேறான வாழ்வியல் தாமும் உண்டெனில்,
வேராய் அவற்றுள் பிணைப்பும் உண்டு!
செவ்விய தாகநம் அறிவைச் செய்து,
சிதையா வாழ்வியல் கொண்டு வாழ்வோம்!

- கவ்வளவன் ஆகிய து.ப. அசோகன்